03

# முஹம்மத் r அவர்களை நேசிப்போம்

‘‘விசுவாசிகளுக்கு அவர்களுடைய உயிர்களை விட (நமது தூதரான) நபிதான் மிகப் பிரதானமானவர்’’ ( அல்குர்ஆன் 33:06).

முஹம்மத் r அவர்களை நேசித்தல் ‘ஹுப்புர் ரஸூல்’, ‘மஹப்பதுர் ரஸூல்’ என்ற சொற்றொடர்களால் அழைக்கப்படுகின்றது. இது இஸ்லாத்தில் மிக முக்கியமான ஓர் அங்கமாகும். இதனையே மேலுள்ள அல்குர்ஆன் வசனம் சுட்டிக் காட்டுகின்றது. அதன் விளக்கத்தைப் பின்வரும் ஹதீஸ் இவ்வாறு தெளிவுபடுத்திக் காட்டுகின்றது.

‘‘எனது ஆத்மா யாரின் கையில் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக! உங்களில் ஒருவருக்கு தன் பெற்றோரையும் பிள்ளைகளையும் விட, மற்றும் மனிதர்கள் அனைவரையும் விட, நான் விருப்பத்துக்குரியவனாக மாறும் வரை அவர் ஈமான் கொண்டவராக மாட்டார்’’ (புஹாரி).

இவ்விரு மேற்கோள்களிலுமிருந்து கீழ்வரும் உண்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.

- எமது இன்னுயிரை விட அதிகமாக முஹம்மத் r அவர்களை நேசிக்க வேண்டும்.
- முஹம்மத் r அவர்களை நேசிப்பது எமது கடமையாகும்.
- முஹம்மத் r அவர்களை நேசிப்பது ஈமான் பரிபூரணமடைவதற்கான வழியாகும்.

விருப்பங்கள் வாழ்வைத் தீர்மானிக்கின்றன. நாம் சிலரை விரும்பும்போது அவர்களின் உயர்ந்த பண்புகளைப் பின்பற்றுவோம். இதுபோல், அனைவரையும் விட மேலான முஹம்மத் r அவர்களை விரும்பும்போது அவர்களின் அதி உன்னதப் பண்புகளைப் பின்பற்றத் தூண்டப்படுவோம்.

முஹம்மத் r அவர்களை ஏன் நேசிக்க வேண்டும்?

1. அது அல்லாஹ்வின் கட்டளையாக இருந்தது.
2. அவர்கள் அல்லாஹ்வின் அன்புக்குப் பாத்திரமானவர்களாக இருந்தார்கள்.
3. அவர்கள் மனிதர்கள் மீது மிகுந்த அன்புள்ளவர்களாகக் காணப்பட்டார்கள்.

‘‘நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் துன்பத்திற்குள்ளாகி விட்டால் அது அவருக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கின்றது. அன்றி உங்(கள் நன்மை)களையே அவர் பெரிதும் விரும்புகிறார். இன்னும் மு:.மின்கள் மீது மிக்க கருணையும் கிருபையும் உடையவராக இருக்கின்றார்’’ (அல்குர்ஆன் 9:128).

4. மிக உயர்ந்த பண்பாடுகள் அவர்களிடம் காணப்பட்டன.

"மேலும் திண்ணமாக நற்குணத்தின் மிக உன்னதமான நிலையில் நீர் இருக்கின்றீர்" (அல்குர்ஆன் 68:04).

5. குறுகிய காலத்துக்குள் ஆன்மீக, லௌகீகத் துறைகளில் பாரிய வெற்றியை ஈட்டினார்கள்.
6. சாதாரண மக்களைக் கொண்டு உன்னத சமூகமொன்றை உருவாக்கினார்கள்.
7. அல்லாஹ்வினால் உலகுக்கு அனுப்பப்பட்ட இறுதித் தூதராகக் காணப்படுகிறார்கள்.



ஒரு மனிதனை நேசிப்பதற்கு என்ன பண்புகள் காணப்பட வேண்டுமோ அத்தனையும் முஹம்மத் r அவர்களிடத்தில் காணப்பட்டன. எனவேதான் ஸஹாபாக்கள் அவர்களை உயிருக்குயிராக நேசித்தார்கள். அபூசுப்யான் காபிராக இருக்கும் போதே "முஹம்மதை அவரது தோழர்கள் நேசிப்பது போன்று உலகில் எவரும் எவரையும் நேசிப்பதை நான் காணவில்லை" என வியப்போடு கூறியிருக்கின்றார். (நூல்: அல்பிதாயா வந்நிஹாயா)

உஹத் யுத்தம் முடிவடைந்த வேளை, அந்த யுத்தத்தில் தனது கணவன், மகன், தந்தை, சகோதரன் ஆகிய நால்வரும் ஷஹீதாக்கப்பட்டுவிட்டதாக ஒரு ஸஹாபிப் பெண்மணி செவியுறுகிறார். இருந்தும் அப்பெண், 'நபி r அவர்கள் உயிரோடிருக்கின்றார்களா?' என்றே வினவினார். அவர்கள் பாதுகாப்பாக இருப்பதாகப் பதில் கிடைத்தபோது அவர்களுக்கு அருகே சென்ற அப்பெண்மணி, 'நீங்கள் பாதுகாப்பாக இருக்கும்போது ஏனைய அனைத்து துன்பங்களும் சாதாரணமானவையே' எனக் குறிப்பிட்டார் (நூல்: அல்பிதாயா வந்நிஹாயா). இவ்வாறு முஹம்மத் r அவர்கள் மீது வைத்திருந்த ஆழ்ந்த அன்பை எடுத்துக் காட்ட ஸஹாபாக்களது வரலாற்றில் பல உதாரணங்கள் உள்ளன.

ஸஹாபாக்களை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் முஹம்மத் r அவர்களை நேசிப்போம். எமது அன்றாட வாழ்வில் அந்நேசத்தை வெளிப்படுத்துவோம். இதற்காக,

- எமது வாழ்க்கைக்கு முஹம்மத் r அவர்களையே முன்மாதிரியாகக் கொள்வோம்.

"அல்லாஹ்வையும் மறுமைநாளையும் உறுதியாக நம்புகின்றவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே உங்களுக்கு இருக்கின்றது" (அல்குர்ஆன் 33:21).

- வாழ்வின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முஹம்மத் r அவர்களது வழிகாட்டலைப் பின்பற்றுவோம்.

  ‘‘ஆனால், (முஹம்மதே!) உம் இரட்சகன் (ரப்பு) மீது சத்தியமாக! அவர்கள் தங்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்குகளில் உம்மை நீதிபதியாக ஏற்றுக் கொண்டு பின்னர் நீர் அளிக்கின்ற தீர்ப்பு குறித்து தம் உள்ளங்களில் எத்தகைய அதிருப்தியும் கொள்ளாமல் முற்றிலும் அதற்கு அடிபணியாதவரை அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள்’’ (அல்குர்ஆன் 4:65).

- முஹம்மத் r அவர்கள் பற்றிய தப்பபிப்பிராயங்களை இல்லாதொழிக்க உழைப்போம்.

  ‘‘யார் எம் சார்பாக அவர்களுக்கு பதிலளிக்கிறாரோ அவருக்கு சுவனம் உண்டு’’ (முஸ்லிம்).

- முஹம்மத் r அவர்களது குடும்பத்தினரையும் ஸஹாபாக்களையும் நேசிப்போம்.

  உ-ம்: ஸஹாபாக்கள் பற்றி முஹம்மத் r அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:-

  ‘‘விசுவாசி அவர்களை விரும்புவான். நயவஞ்சகன் அவர்களை வெறுப்பான். யார் அவர்களை விரும்புகின்றாரோ அவரை அல்லாஹ் விரும்புவான். யார் அவர்களை வெறுக்கின்றாரோ அல்லாஹ் அவர்களை வெறுப்பான்’’ (புஹாரி, முஸ்லிம்).

- முஹம்மத் r அவர்கள் மீது அதிகமாக ஸலவாத் சொல்வோம்.

  ‘‘யார் என்மீது ஒரு ஸலவாத் சொல்கிறாரோ அவர் மீது அல்லாஹ் பத்து ஸலவாத் சொல்கிறான்’’ (முஸ்லிம்).

  ‘‘உலோபி யாரெனில், எவருக்கு நான் ஞாபகப்படுத்தப்பட்டும் அவர் என்மீது ஸலவாத் சொல்லவில்லையோ அவர்தான்’’ (திர்மிதி, அஹ்மத்).

- முஹம்மத் r அவர்களது ஸீராவைப் படித்து அதனைப் பின்பற்றுவோம்
- முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக அனுபவித்த துன்பங்களை நினைவு கூருவோம்.

**பயிற்சி:**

1. முஹம்மத் r அவர்களை ஸஹாபாக்கள் நேசித்த முறையை எடுத்துக் காட்டும் சம்பவமொன்றை எழுதுக.
2. முஹம்மத் r அவர்களை நேசிப்பது கடமை என்பதை எடுத்துக் காட்டும் குர்ஆன் வசனங்கள் இரண்டினை எழுதுக.
3. முஹம்மத் r அவர்களை நேசிப்பதற்கு நீர் செய்யக் கூடிய செயல்கள் மூன்றைக் குறிப்பிடுக.